2004 பிப்ரவரி 10]

உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று அந்த மொடையூர் காலனியில் மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் இந்த ஆண்டே இன்னும் ஒரு சில தினங்களில் அந்த மையம் அங்கு அமைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், என் தொகுதி மக்கள் சார்பிலும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்து, மொடையூர் கிராமத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த கிராமப் பொது மக்கள் அனைவரும் ஒரு இலட்சம் ரூபாய் கட்டி உள்ளார்கள். இந்த ஆண்டு அந்தப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறையான முன்மொழிவு அனுப்பப்பட்டு இருக்குமேயானால், அடுத்த கல்வியாண்டில் இது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 33, திரு. ஏ. பூவராகமூர்த்தி, மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்.

33—

அரசு பல்தொழில் நுட்பப் பயிலகம்

***32863—திரு. ஏ. பூவராகமூர்த்தி:**

மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சரப்பாக்கம் தொகுதி, சித்தாமூர் ஒன்றியத்தில், அரசு பல்தொழில் நுட்பப் பயிலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2004 பிப்ரவரி 10

மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. பூவராகமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கி வரும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முதலிடம் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அச்சரப்பாக்கம் தொகுதியில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகம்பேர் வாழ்கிறார்கள். அவர்களின் பிள்ளைகளின் நலன் கருதி இந்த ஆண்டு இல்லையென்றாலும்கூட மறுபரிசீலனை செய்து அடுத்த ஆண்டாவது பல்தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றை அமைக்க நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் முன்பு Pre-University Course அதாவது, புகுமுக வகுப்பு இருந்த நேரத்தில் கிராமப்புறத்திலே இருக்கிற மாணவர்கள் கல்லூரிகளுக்குச் சென்று புகுமுக வகுப்பு படிக்க முடியாத நிலையில் பாலிடெக்னிக்கிற்குச் சென்று சேரவேண்டிய நிலைமை இருந்தது. அப்போது அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. ஆனால், இப்போது பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்ட பிறகு, பிளஸ்-2 படித்த மாணவர்கள் நேரடியாக பொறியியல் கல்லூரியில் சேருகிற ஒரு வாய்ப்பு இருக்கிறது. அந்த அடிப்படையில் தமிழ்நாட்டிலே, இப்போது நிறைய பொறியியல் கல்லூரிகள் வந்துவிட்ட காரணத்தாலே பொறியியல் கல்லூரிகளிலே சேருவதற்கு மாணவர்கள் விரும்புகிறார்கள். பாலிடெக்னிக்குகளில் சேருவதற்கு அதிகமான மாணவர்கள் முன்வரவில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய மாவட்டமான காஞ்சிபுரம் மாவட்டத்தில் 14 பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. அந்தப் பாலிடெக்னிக்குகளில் இந்த ஆண்டு மட்டும் 396 காலியிடங்கள் இருக்கின்றன. எனவே, காலியிடங்கள் இருக்கிறபட்சத்தில், அதே மாவட்டத்தில் மீண்டும் இதுபோன்ற பாலிடெக்னிக்குகள் அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.